# ஆகஸ்ட்– 05 – பொதுக்கால 18ம் ஞாயிறு

**என் மக்களே! என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள்: என் வாய்மொழிகளுக்குச் செவிகொடுங்கள். திபா. 78:1**

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 16:2–4,12–15

அந்நாளில் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பினர் அனைவரும் சீன் பாலைநிலத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தனர்.இஸ்ரயேல் மக்கள் அவர்களை நோக்கி, "இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து, அப்பம் உண்டு நிறைவடைந்து, எகிப்து நாட்டிலேயே ஆண்டவர் கையால் நாங்கள் இறந்திருந்தால் எத்துணை நலமாயிருந்திருக்கும்! ஆனால் இந்தச் சபையினர் அனைவரும் பசியால் மாண்டு போகவோ இப்பாலைநிலத்திற்குள் நீங்கள் எங்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்றனர்.அப்போது ஆண்டவர் மோசேயை நோக்கி, "இதோ பார்! நான் உங்களுக்காக வானத்திலிருந்து அப்பத்தைப் பொழியப் போகிறேன். மக்கள் வெளியே போய்த் தேவையானதை அன்றன்று சேகரித்துக்கொள்ள வேண்டும். என்கட்டளைப்படி நடப்பார்களா இல்லையா என்பதை நான் இவ்வாறு சோதித்தறியப் போகிறேன்.இஸ்ரயேல் மக்களின் முறையீடுகளை நான் கேட்டுள்ளேன். நீ அவர்களிடம், "மாலையில் நீங்கள் இறைச்சி உண்ணலாம். காலையில் அப்பம் உண்டு நிறைவடையலாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்பதை இதனால் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்" என்றுசொல்" என்றார்.மாலையில் காடைகள் பறந்துவந்து கூடாரங்களை மூடிக்கொண்டன. காலையில் பனிப்படலம் கூடாரத்தைச் சுற்றிப்படிந்திருந்தது. பனிப்படலம் மறைந்தபோது பாலை நிலப்பரப்பின்மேல் மென்மையான, தட்டையான, மெல்லிய உறைபனிபோன்ற சிறியபொருள் காணப்பட்டது.இஸ்ரயேல் மக்கள் அதைப் பார்த்துவிட்டு, ஒருவரை ஒருவர் நோக்கி "மன்னா" என்றனர். ஏனெனில், அது என்ன என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அப்போது மோசே அவர்களை நோக்கி, "ஆண்டவர் உங்களுக்கு உணவாகத் தந்த அப்பம் இதுவே என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் அவர்களுக்கு வானத்து உணவை வணங்கினார்.

## இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 4 : 17, 20 – 24

சகோதர சகோதரிகளே! ஆதலால் நான் ஆண்டவர் பெயரால் வற்புறுத்திச் சொல்வது இதுவே பிற இனத்தவர் வாழ்வதுபோல் இனி நீங்கள் வாழக்கூடாது. அவர்கள் தங்கள் வீணான எண்ணங்களுக்கேற்ப வாழ்கிறார்கள்.அவர்களது மனம் இருளடைந்திருக்கிறது. அவர்களது பிடிவாத உள்ளத்தின் விளைவாய் ஏற்பட்ட அறியாமையின் காரணத்தால் அவர்கள் கடவுள் தரும் வாழ்வுக்குப் புறம்பானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உள்ளம் மரத்துப்போய்ப் பேராசைகொண்டு, ஒழுக்கக் கேடான செயல்களில் எல்லாம் ஈடுபட்டுத் தங்களைக் காமவெறிக்கும் உட்படுத்தினார்கள். ஆனால் நீங்கள் கிறிஸ்துவைப் பற்றிக் கற்றறிந்தது இதுவல்ல.உண்மையில் நீங்கள் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டதும் கற்றறிந்ததும் அவரிடமுள்ள உண்மைக்கேற்பவே இருந்தது. எனவே, உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி, தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்துவிடுங்கள்.உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்படவேண்டும். கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்.

## நற்செய்தி : யோவான் 6 : 24 – 35

அக்காலத்தில் இயேசுவும் அவருடைய சீடரும் திபேரியாவில் இல்லை என்பதைக் கண்டமக்கள் கூட்டமாய் அப்படகுகளில் ஏறி இயேசுவைத் தேடிக் கப்பர்நாகுமுக்குச் சென்றனர்.அங்கு கடற்கரையில் அவர்கள் அவரைக்கண்டு, "ரபி, எப்போது இங்கு வந்தீர்?" என்று கேட்டார்கள்.இயேசு மறுமொழியாக, "நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத்தேடுகிறீர்கள் என உறுதியாக உங்களுக்குச்சொல்கிறேன்.அழிந்துபோகும் உணவுக்காக உழைக்கவேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிடமகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய கடவுள் அவருக்கே தம் அதிகாரத்தை அளித்துள்ளார்" என்றார்.அவர்கள் அவரை நோக்கி, "எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களைப்பார்த்து, "கடவுள் அனுப்பியவரை நம்பவதே கடவுளுக்கேற்ற செயல்"" என்றார். அவர்கள், "நாங்கள் கண்டு உம்மை நம்பும் வகையில் நீர் என்ன அரும் அடையாளம் காட்டுகிறீர்? அதற்காக என்ன அரும் செயல் செய்கிறீர்?. எங்கள் முன்னோர் பாலை நிலத்தில் மன்னாவை உண்டனரே! "அவர்கள் உண்பதற்கு வானிலிருந்து உணவு அருளினார்" என்று மறைநூலிலும் எழுதப்பட்டுள்ளது அல்லவா!" என்றனர்.இயேசு அவர்களிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல் வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே.கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது" என்றார்.அவர்கள், "ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும்தாரும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.இயேசு அவர்களிடம், "வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" என்றார்.

**தியானம்:** "இயேசுவே வானிலிருந்து இறங்கி வந்த உணவு" ஆண்டவர் இயேசுவே வானிலிருந்து இறங்கி வந்த உணவு. அந்த உயிருள்ள உணவை நாமுண்டால், நிலைவாழ்வைப் பெறுவோம். வானிலிருந்து இறங்கி வந்த உணவான இயேசுவை நம்பி, அவர் மீது முழுமையான நம்பிக்கைவைத்தால், அவர் எமக்கு அனைத்து நலன்களையும் வழங்குவார் என்பதனை நற்செய்தி (யோவான் 6 :24-35) தெளிவுபடுத்துகிறது. நற்செய்தியை (யோவான் 6:24-35) ஆழமாக உற்றுநோக்குவோமாயின், சாதாரண உணவு என்பது உயிரோடு இருப்பதற்கு உதவிசெய்கிறது. இயேசு தரும் உணவு இவ்வுலகிலும் மேலாக விண்ணுலகில் உயிர்வாழ்வதற்கு உதவுகிறது. இதனாலேயே "வாழ்வுதரும் உணவு நானே" என்று ஆண்டவர் இயேசு குறிப்பிடுகிறார். விண்ணுலகில் உயிர்வாழ்வது, உயிரோடு வாழும் கடவுளோடு இணைந்த வாழ்வு எனப்படும். அவ்வாறான பாக்கியம் நிறைந்த வாழ்வு இயேசுவால் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இயேசு இல்லாமல் அந்த வாழ்வைப் பெறமுடியாது. இயேசுதான் அந்த வாழ்வுதரும் உணவு என்பதனை நற்செய்தி (யோவான் 6:24-35) வேறுவிதமாகப் படிப்பிக்கின்றது என்பதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். வானிலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவான, நமது வாழ்வில் அமைதியைத்தர வல்லவரான இயேசுவை நாம் உண்டால், நிலைவாழ்வைப் பெறுவோம். இயேசுவில் முழுமையான நம்பிக்கை வைத்தால், அனைத்து நலன்களையும் பெற்றுத்தருவார். அவரைப் பற்றிக்கொண்டால், நமது வாழ்வில் கவலை, கண்ணீருக்கு இடமில்லை. இயேசு ஒருவரே நம்மை உயிர் வாழவைக்கிறார் என்பது வெறும் இருத்தல் அல்ல, அத்தகைய வாழ்வை நமக்குத்தரக்கூடியவர் இயேசு மட்டும்தான். இயேசு நிறைவாழ்வின் உணவை (யோவான் 6:24-35) அறிமுகப்படுத்திப் பேசியபோது, மக்கள் ஆர்வத்துடன் இயேசுவிடம் வைக்கும் கோரிக்கை"ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்" என்பதாகும். அவ்வாறு கேட்ட அன்றைய மக்களின் வேண்டுதலே, நமது அன்றாட செபமாகவேண்டும். ஆண்டவர் இயேசு "எங்கள் அன்றாட உணவை எங்களுக்குத் தாரும்" என்று மன்றாட சொல்லித்தந்தார். ஆனால், எந்த உணவுக்காக? கடவுள் தரும் உணவுக்காக நாம் மன்றாடவேண்டும். அவ்வாறு அனுதினமும் மன்றாடுவோமா? அதனையே நமது வேண்டுதலாகவும் மாற்றுவோமா!